1986 நவம்பர் 25] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

அரசு தொழிலாளர் துறையினரால் நிர்ணயிக்கப்பட்ட குறுமக்கூலியைவிட, அரசு ரப்பர் கழகத் தொழிலாளர்களுக்கு கூடுதலாக ஊதியமும் கிராக்கிப்படியும் வழங்கி வருவதால், மேலும் கூடுதலாக கொடுக்கப்பட வேண்டிய மூன்று தவணை கிராக்கிப் படியை நிதிநிலை நெருக்கடி காரணத்தால் கொடுக்க இயலாமையாலும், இதற்கு காரணமான ஒப்பந்தத்தை மாற்றியமைக்க தொழில் தகராறு சட்டம் பிரிவு 19-ன்படி கழகத்தின் சார்பில் 1–2–1986ல் நாகர்கோவில் உதவி ஆணையாளர், தொழில்ாளர் துறை அவர்களுக்கு கோரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. இது பற்றிய சமரச பேச்சு வார்த்தை கடைசியாக 8–10–1986 அன்று தொழிலாளர் துறையின் உதவி ஆணையாளர் நாகர்கோவில் முன் நடைபெற்றது. ஆனால் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. இன்னமும் நிலுவையில் உள்ளது.

4. வழங்கப்பட வேண்டிய மூன்று தவணை கிராக்கிப்படிக்கும் தேவையான நிதிச் செலவீடு சுமார் ரூ. 4.60 இலட்சம் ஆகும். இது தவிர ஒவ்வொரு ஆண்டும் ஆகக்கூடிய தொடர் செலவிலும் ரூ. 1.5 இலட்சம் ஆகும். இயற்கை ரப்பருக்கு தற்போது மார்க்கெட்டில் கிராக்கி இல்லாததால், கழகத்தில் உள்ள ரப்பரை விற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அரசு ரப்பர் கழகத்தின் தற்போதைய பொருளாதார நிலை, இப்பெரும் தொகையை செலவு செய்ய இடம் தரவில்லை. இந்நிலையிலும் மிகுந்த சிரமங்களுக்கிடையே இவ்வாண்டு அக்டோபர் மாதத்தில் தொழிலாளர்களுக்கு 1985-66 ஆண்டுக்கான உரிய குறைந்தபட்ச போனஸ் 8.33% கொடுக்கப்பட்டுள்ளது.

5. ஏற்கனவே, செய்துள்ள ஒப்பந்தத்திற்குப் பதிலாக வேறு ஒரு ஒப்பந்தம் ஏற்படும் வரை முந்திய ஒப்பந்தத்திற்கு மதிப்பளிக்க வேண்டியுள்ளதால், அதன்படி கொடுக்கப்பட வேண்டிய கிராக்கிப்படி தவணைகளை இந்நிறுவனத்தின் நிதி நிலைமை சீரடைந்தவுடன், தொழிலாளர்களுக்கு தவணை முறையில் வழங்க அரசு ரப்பர் கழகம் முடிவு செய்துள்ளது.

(அஅ) இந்திரா காட்டன் மில்ஸ் தொழிலாளர் பிரச்சினை.

மாண்புமிகு பேரவை தலைவர்: திருவாளர்கள் ம. ஆபிரகாம், வி.பி. சிந்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்,

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1986 நவம்பர் 25

அறிக்கை.

சென்னை—44, குரோம்பேட்டையிலுள்ள இந்திரா காட்டன் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆலை தொழிலாளர்களுக்கு ஈட்டிய விடுப்பு ஊதியம், போனஸ், பிழைப்பூதியம் ஆகியவை வழங்கவில்லை என்று தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போது இந்திரா பஞ்சாலை அண்ணா பணியாளர் சங்கம் தெரிவித்தது.

எனவே, தொழிலாளர் ஆணையரின் 11—11—86 மற்றும் 12—11—86 நாளைய கடிதங்கள் மூலம் தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய மேற்குறிப்பிட்ட தொகைகளை வழங்குமாறு நிர்வாகத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் சட்டப்படி சேரவேண்டிய ஈட்டிய விடுப்பு சம்பளம், பிழைப்பு ஊதியம் ஆகிய தொகைகளை நிர்வாகம் வழங்கவில்லை எனில் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் முன்பு மனு செய்து நிவாரணம் காணலாம், போனஸ் தொகை பற்றி முறையான தொழிற்தகராறு எழுப்பி நிவாரணம் காண வழி உள்ளது.

இந்திராகாட்டன் மில்ஸ் நிறுவனத்தில் 23—9—86 அன்று இணை ஆணையர் (சமரசம்) முன்பு ஏற்பட்ட ஒப்பந்தத்தை அடுத்து ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் குறித்து தொழிலாளர் தனித்துணை ஆணையர் முன்பு பேச்சு வார்த்தை நிலுவையில் உள்ளது தொழிலாளர்களுக்கு சட்டபூர்வமாக கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுப்பதற்கும் வேலை மறுக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் தனித்துணை ஆணையர் நிர்வாகத்திற்கு ஏற்கனவே ஆலோசனை கூறியுள்ளார். இதன் அடிப்படையில் 24—11—86 அன்று நிர்வாகத்தினருடன் நடைபெற உள்ள பேச்சுவார்த்தையில் இரு தரப்பினருக்கும் இடையே ஒரு உடன்பாடு ஏற்படுத்தி சகஜநிலை ஏற்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

தொழிலாளர்களின் உள்ளிருப்பு போராட்டம் பற்றி தகவல் ஏதும் தொழிலாளர் துறைக்கு தெரிவிக்கப்படவில்லை.

இந்த ஆலையின் பிரச்சனை தொழிலாளர் துறையால் கவனிக்கப்பட்டு வருகிறது.

(ஆஆ) மந்தைவெளி, பட்டினப்பாக்கம் பகுதிகளில் திறந்தவெளி சாக்கடை அமைப்பதன் அவசியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பா. வளர்மதி ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.